பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்களவைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
RASI
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கப்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2. 50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்டி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கப்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 விபவ ஞூ தை மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 25 (03-02-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 61

## ஈழத்தமிழர் விவகாரம்

# இந்திய அரசுடன் கலைஞர் பேசுவார்

### முந்திய முயற்சிகளின் தன்மை குறித்து ஆராய்வதாகக் கூறுகிறார்

சென்னை, பெப்ரவரி 3

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய மத்திய அரசுடன், தாம் பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாக தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கும் பொருட்டு, மத்திய அரசாங்கம் ஏற்கனவே இலங்கை அரசு, தமிழர் அமைப்புகள் என்பவற்றுடன் அண்மைக் காலத்தில் நடத்திய பேச்சுக்களின் தன்மைகளைத் தாம் இப்போது ஆராய்ந்து வருவதாகவும் அவர் சொன்னார்.

''மத்திய அரசுடன் நடத்தும் பேச்சுக்களின்போது ஈழத் தமிழர் பகுதிகளில் பூரண அமைதி திரும்புவதற்கு முயற்சிப்பேன்'' என்றும் முதலமைச்சர் கூறினார்.

இங்கு நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியில் நிற்பதால் இப்போது அடையப்பெற்ற சமாதானம் பூரணமானது அல்ல.

தமிழர் பகுதிகளில் நடத்தப்பட்ட தேர்தல், நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட தமிழர் அமைச்சரவை பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே பிரபாகரனின் அபிப்பிராயங்களை (Reservations) நான் அறிந்துகொள்ள முயற்சிப்பேன்.

நான் இது காலவரை ஆட்சியில் இருக்கவில்லை. இதனால் மத்திய அரசின் நடவடிக்கைகள் பற்றி சரிவர அறிந்துகொள்ள முடியவில்லை.

மத்திய அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் இலங்கையரசுடனும் ஏனைய தமிழர் அமைப்புக்களுடனும் வெவ்வேறு கட்டங்களில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் தன்மைகள் பற்றியும் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைக்கவில்லை.

இப்போது அதற்கான

(6 ஆம் பக்கம் பார்க்க)



கருணாநிதி

## அடகு நகைகளில் ஒரு பகுதி நேற்று யாழ் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், பெப் 3

வடமாகாணத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளின் ஒரு தொகுதி நேற்று யாழ் வந்து சேர்ந்தது.

மொத்தம் ஆயிரத்து 171 தொகுதி நகைகள் வந்து சேர்ந்தன.

வடமாகாணத்திலுள்ள மக்கள் வங்கியின் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 18 ஆயிரமாகும்.

இதில் ஏற்கனவே 8 ஆயிரம் தொகுதிகள் வழங்கப்பட்டுவிட்டன.

எஞ்சியுள்ள பத்தாயிரம் தொகுதி நகைகளில் ஒரு பகுதியாகவே நேற்று ஆயிரத்து 171 தொகுதி நகைகள் வந்து சேர்ந்தன.

யாழ் பிரதான வீதி, புங்குடுதீவு, கன்னாதிட்டி, சங்கானை ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ள அடகு நகைகளை மீட்பதற்கு கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 19 ஆம்

(6ஆம் பக்கம் பார்க்க)

### நகை பெறுவதற்கான திகதி விவரம்

யாழ்ப்பாணம், பெப் 3

யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் 14 ஆம் 16 ஆம் திகதிகளில் கன்னாதிட்டி, சங்கானை ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களின் நகைகள் வழமையான வங்கி நேரத்தில் காலை 9 மணி முதல் பதினொரு மணி வரை வழங்கப்படும்.

யாழ் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 16 ஆம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் புங்குடுதீவு, யாழ் பிரதான வீதி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களின் நகைகள் காலை ஒன்பது மணி முதல் பதினொரு மணி வரை வழங்கப்படும்.

மேற்படி அடகு நகைகள் வந்து சேர்ந்திருப்பது குறித்து சம்பந்தப்பட்ட நகை உரிமையாளர்களுக்கு மக்கள் வங்கி கடிதமூலம் அறிவிக்கும். [ஓ-ஐ]

### பாடசாலைகள் நேற்றும் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், பெப் 3

குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பல பாடசாலைகள் நேற்றும் இயங்கவில்லை.

மாணவர்கள் வரவு பெருமளவு குறைந்திருந்ததால் வகுப்புக்களில் போதனைகள் இடம்பெறவில்லை.

வடமராட்சிப் பகுதியிலும் பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-160-70)

### சுபநேரம்

தை-21

சுபநேரம்:
6. 35 முதல் 8. 05 வரை
ராகுகாலம்:
11.05 முதல் 12 35 வரை

### செயலகத்தின் உள்ளே செல்ல கட்டுப்பாடு

யாழ்ப்பாணம் பெப் 3

யாழ் செயலகம் இயங்குகின்ற நேரத்தில் பொதுமக்கள் உள்ளே செல்வதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் பொதுமக்கள் உட்செல்வது தடை செய்யப்பட்டிருந்த போதிலும் அவசிய தேவைகளைப் பொறுத்து சிலர் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஓ-5)

### 2 சிப்பாய்கள் கைது!

கொழும்பு பெப் 3

இலங்கை தேசிய தலைப்படையைச் சேர்ந்த இரண்டு சிப்பாய்கள் உரகஸ் பன்ஹன்டியா பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஓர் ஆணும் பெண்ணும் கொலைபட்ட சம்பவம் தொடர்பாக இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது [உ-எ]

### எம் பி. பதவியை மூப்பனார் இராஜினமா!

சென்னை, பெப் 3

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் நேற்று தனது ராஜ்யசபா எம். பி பதவியை இராஜினமாச் செய்தார்.

அண்மையில் நடந்த தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் திரு. மூப்பனார் பாபநாசம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்— என்பது தெரிந்ததே. (உ-எ)

### நேற்றும் 27பேர் கொலை

தென்பகுதியில் நேற்று மட்டும் ஜே. வி பி தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் நடத்திய தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டனர் என்று ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன. [ஓ-எ]

## மீளகுடியமர்தல் நிவாரணம் ஏப்ரலுக்குள் வழங்கப்படும்

### யாழ். செயலகம் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம் பெப் 3

முதலாம் இரண்டாம் கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவுகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் கொடுத்து முடிப்பதற்கான துரித நடவடிக்கைகளை யாழ் செயலகம் மேற்கொண்டு வருகிறது.

யாழ் செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

முதலாம் கட்ட நிவாரணமாக ஆயிரம் ரூபாவைப் பெற்ற சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கும் இரண்டாம் கட்ட நிவாரணமாக மிகுதி ஆயிரம் ரூபாவையும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஓ-5)

### அண்ணா நினைவுதினம்

சென்னை பெப் 3

பேரறிஞர் அண்ணாவின் 20 ஆவது நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. (உ-எ)

### பருத்தித்துறை பொலீஸ் மூடப்பட்டது

பருத்தித்துறை ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையம் கடந்த புதன்கிழமை முதல் மூடப்பட்டுள்ளது.

அங்கு கடமையாற்றிய பொலீஸார் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்ற பணிக்கப் பட்டுள்ளனர்.

மேற்படி பொலீஸ் நிலையம் பருத்தித்துறை வாடி வீட்டில் இயங்கி வந்தது.

கடந்த புதன் கிழமை பொலீஸ் நிலையத்துக்கு கிடைத்த கடிதம் ஒன்றை அடுத்தே பொலீஸ் நிலையம் மூடப்பட்டதாக அறிய வந்துள்ளது. (ஓ-10)

## புனரமைப்புக் கடன்:

# இல. வங்கி நிபந்தனை

## கொழும்பிலிருந்து வந்தது

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

வங்கிகள் மூலமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ள புனரமைப்புக்கான கடன் வகைகளை வழங்குவதற்கு, இலங்கை வங்கியின் தலைமைப்பீடம், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தனது கிளைகளுக்கு கடும் நிபந்தனை விதித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள காணி அலுவலகங்கள், காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகங்கள், காப்புறுதிக் கம்பெனிகளின் அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை இயங்க ஆரம்பித்த பிறகே அந்தப் பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனரமைப்புக் கடன் உதவிகளை வழங்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

இலங்கை வங்கியின் தலைமை அலுவலகம் வடக்கு-கிழக்கு பகுதியிலுள்ள அதன் பிராந்திய தலைமை அலுவலகங்களுக்கு இவ்வாறு அறிவித்திருக்கிறது.

இது சம்பந்தமான விபரமான சுற்றறிக்கை ஒன்று பிராந்திய அலுவலகங்களுக்குக் கொழும்பிலிருந்து கிடைத்திருக்

(6ஆம் பக்கம் பார்க்க)

### வழிமறிப்பில் ஈடுபட முயன்ற

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் மீது சூடு! தடியடி!!

## இருவர் மரணம்! பத்துப் பேர் காயம்!!

யாழ்ப்பாணம், பெப். 3

வழிமறிப்புப் போராட்டத்தில்ஈடுபட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் மீது துப்பாக்கி மற்றும் தடியடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது இதனால் இரு மாணவர்கள் உயிரிழந்தனர். பத்து மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 10 30 மணியளவில் யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகில் பலாலி வீதி - இராமநாதன் வீதிச் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் நின்ற மாணவன் ஒருவன் காயமடைந்தது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவுக்கும் வகையில் நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக வாசலில் இருந்து ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் பலாலி வீதி — இராமநாதன் வீதிச் சந்தியில் இந்திய அமைதிப்படை முகாம் அருகில் வழிமறிப்பில் ஈடுபட முயன்றனர்.

அவ்வேளையில் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. காயமுற்ற மாணவர்கள் கலைந்து ஓடினர். அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் மீது துப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தார் பாண்டியன்

சென்னை, பெப்3

அ. தி. மு க. ஜானகி அணியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே ஒரு எம். எல். ஏ யான திரு. பி. எச். பாண்டியன், தான் புதிய அணி ஒன்றை ஆரம்பித்திருப்பதாக நேற்று அறிவித்தார்.

ஜானகி அணியும் ஜெயலலிதா அணியும் தனது அணியுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று திரு பாண்டியன் மேலும் தெரிவித்தார்

எம் ஜி ஆரின் உண்மையான அ தி மு.க, எனது அணி என்றும் முன்னாள் சபாநாயகரான அவர் தெரிவித்தார்.

இதனிடையில் ஜானகி அம்மாளின் அ தி.மு.க. வுடன் இணையும் ஜெய

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



சக்களத்திகள் ஒண்டு சேர்ந்தது உவர் பழைய சட்டம்பியாருக்குப் பிடிக்கேல்லைப் போலை ......! அதுதான் தன்ரை கூத்தைத் தொடர்றார்......!

## காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப் .3

யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

1. ஆறுமுகம் கோடீஸ்வரன் வயது 23, விஞ்ஞானபீடம், 2 ஆவது வருடம்- காரைநகர்.
2. தர்மலிங்கம் லோகநாதன் வயது 22, விஞ்ஞானபீடம், முதலாம் வருடம்- களபூமி, காரைநகர்.
3. இ சந்திரகுமார் வயது 24, விஞ்ஞான பீடம், இறுதியாண்டு - இளவாலை.
4. தியாகராசா சுரேந்திரன் வயது 21, விஞ்ஞானபீடம், முதலாம் வருடம் - யாழ்ப்பாணம்.
5. திருநாவுக்கரசு சத்தியசீலன் வயது 21, மருத்துவபீடம், முதலாம் ஆண்டு, கந்தர்மடம்.
6. கனகராசா சிவதாஸ் வயது 21, விஞ்ஞானபீடம், முதலாம் ஆண்டு- பருத்தித்துறை.
7. வேலுப்பிள்ளை அருணகிரிநாதன் வயது 41, தாவடி - இவர் குமாரசாமி வீதியால் வந்துகொண்டிருந்த பொழுது சூட்டுக்கு இலக்கானார்.

அடிகாயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

1. எம். எம். மன்சூர்

[6-ஆம் பக்கம் பார்க்க]

### சென்றி மீது சூடு!

யாழ்ப்பாணம், பெப் 3

உரும்பராய்ப் பகுதியில் நேற்று மாலை அமைதிப்படையினரின் சென்றி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அறிய வந்துள்ளது

ஏற்பட்ட சேத விபரம் குறித்து செய்தி எழுதப்படும்வரை தெரிய வரவில்லை. (ஓ-10)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள், அலுமாரி, கட்டில், கண்ணாடி மேசை, Pram, மேசை Oven, Boiler, Pyrexware Book Rack, Hall - Set செற்றி, அளிர்சாதனப் பெட்டி, Wheel - Chair T. V Stand மற்றும் பல பலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு 790, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர். (9417)

பாவித்த தளபாடங்கள், கட்டில்கள், Vono Beds, மேசைகள், கண்ணாடி பெரிய அலுமாரி, Dressing table, (3 mirror) Curio Cabinet Dinner wagon, Baby cot, Easy Chair cushions Dinner set, Blankets, Trunks, Aluminium things, Eversilver, Brass பொருள்கள், பெட்டகம், இடாரம் வேறும் பல பொருள்கள் உண்டு தொடர்பு:- Parasakthy Press, Kokuvil Junction [9304]

Honda C 90 Super Deluxe 88 ஸ்ரீ 731 விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். V. மகேந்திரன், 32, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (9432)

### கோழித்தீன்

"மல்டி நேட்ஸ்" இல. 234/C, கிராஸ்லி வீதி. (ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக) உங்களுக்குத் தேவையான பிறிமா அத்துடன் கோப்பறேஷன் கோழித்தீன் வகைகள் சலவற்றுடன் தேங்காய்ப் பிண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (9104)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 9ஆம் திகதி வியாழக்கிழமையும், Golden Comet பிறவுண் போட்டைக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 8 ஆம் திகதி புதன்கிழமையும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9288)

### சமூகக்கல்வி

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது!! சமூகக்கல்வி ஆண்டு 11, ஆண்டு 10. (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன் ந. தாமபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (9306)

### NEW CITY TRADERS

சகலவிதமான T. V. டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர், வயர் பைப்செற் T D K, Maxell Audio Video கசற், வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135, ஸ்தாரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1522)

### கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா இன ஒருநாள் புரொயிலர்க் குஞ்சுகள் சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் சனிக்கிழமை தோறும் வழங்கப்படும். குஞ்சுகளுக்கு 7 நாட்கள் உத்தரவாதம். தொடர்பு:- கிருஷ்ணா பாம் சென்ரர், திருநெல்வேலி, திருமகள் ஸ்ரோஸ், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (9430)

## தேவை

பெண் கிளாக் ஒருவரும் எலெக்றிக்கல் வேலைகள் பழக ஆர்வமுள்ள O/L படித்த இரு இளைஞர்களும் தேவை. நேரில் வரவும். ஓமேகா, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். (ஈழநாடு அலுவலகத்திற்கு எதிரில்) (9323)

மேல் நாட்டு, சீன மற்றும் சமையல் பழக விரும்புவோர் விண்ணப்பிக்கவும். 23 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் நேரில் வர விரும்புவோர் தினசரி காலை 9. 30 மணியளவில் வரவும். பயிற்சிக் காலத்தில் உபகாரப்படி வழங்கப்படும். Yarl Chinese Restaurant, (PVT) Ltd 124, R. R Nalliah Road, Jaffna [9317]

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

9- 1- 89 இலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட சகல வகுப்புகளும் 6- 2- 89 இல் மீண்டும் பழைய நேரசூசிப்படி ஆரம்பமாகிறது. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர் (9143)

புதிய பிரிவு காலை 6 — 7 30 மணி வரை திங்கள், புதன் நாட்களில் மட்டும். ஆரம்பம் 6- 2- 89. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9144)

### O/L ENGLISH

பழைய பாடத்திட்டமீட்டல் வகுப்புகள் ஆரம்பம் 6 2-89 மாலை 5 மணி — 6 மணிவரை கிழமை நாட்களில் 15 வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெறும். S B Iyar 12 வைமன் வீதி, நல்லூர் 9431)

## சேவை

சடிதங்கள், மனுக்கள் தயாரித்தல் ஆங்கிலத் தட்டச்சு, மொழிபெயர்ப்புகள் ஆகியன இளைப்பாறிய அரச உத்தியோகஸ்தரால் தினமும் (ஞாயிறு உட்பட) எந்நேரமும் திறம்படச் செய்து கொடுக்கப்படும். அமைதியான சூழல் தொடர்பு: 82 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [9321]

### திருமண சேவை

புதிய மாங்கல்ய மரிரேஜஸ் நிலையம் சமீப காலத்தில் 14' விநாயகர் ஒழுங்கை கொழும்புத்துறை மேற்கில் ஸ்தாபிக்கப்பட்டு பல இந்து கிறிஸ்தவ விவாகங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. நீங்களும் உங்கள் பிள்ளைகளின் திருமண வைபவத்தை விரைவில் நடத்தி மகிழ என்னுடன் தொடர்பு கொள்க: விவாகப்பொருத்துனர், கு. திருவிளங்கம். (9320)

### தவறிவிட்டது

மடத்தடிக்கும் கச்சேரிக்கும் இடையில் மினிபஸ்ஸில் ஓர் இளம்பெண்ணிடம் பாதுகாப்புக்கு வைக்கக்கொடுத்த பொருட்களை பஸ்ஸிலிருந்து இறங்கும்போது அவசரத்தில் பெற்றுக் கொள்ள மறந்துவிட்டேன் தயவு செய்து நான் கொடுத்தவரிடம் தாழ்மையுடன் அப்பொருட்களை உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [9427]

ஆடருக்குச்செய்து கொடுக்கப்படும்

திருமண பிறந்த தின வைபவங்களுக்கான அலங்கார கேக் வகைகள் ஆடருக்கு பெற்றுக் கொள்ளலாம் ஏ சி.எஸ் தொகுதி ஸ்தாபனங்கள், பொலிஸ் முன்பாக சுன்னாகம். (C/1417)

# பண்டிதர் ஆறுமுகத்துக்கு ஞாயிறன்று வைரவிழா

யாழ்ப்பாணம் பெப் 3 பண்டிதர் திரு அ. ஆறுமுகத்தின் வைரவிழா 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பண்ணாகம் விசாலாட்சி முருகமூர்த்தி கோயில் கல்யாண மண்டபத்தில் புலவர் நா. சிவபாதசுந்தரனார் தலைமையில் நடைபெறும்.

விழாவில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வைரவிழா நாயகனுக்கு "சிவநெறிச் செல்வர்" என்னும் விருதை வழங்குவார்; திரு க. கனகராசா பொன்னாடை போர்த்துவார்.

வைரவிழா மலரை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

திரு க. சி. குலரத்தினம், திரு இ. அப்பாத்துரை, விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. அருணாசலம், சுழிபுரம் வலயக் கொத்தணி அதிபர் திரு. கே. கே. நடராசா உட்பட இன்னும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

பண்டிதர் இ. நமசிவாயதேசிகர், திரு மதி நா. செல்வநாயகம், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். (ச)

## விற்பனைக்கு

பாஸ்போட் விண்ணப்பப்படிவம் வாழ்த்துமடல்கள், பாடசாலை ஒப்படைக்குரிய படங்கள், தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் பாஸ்போட் போன்ட் செய்து கொடுக்கப்படும்

R. S. அலோசியஸ்
புனித அன்னாள் ஆலய ஒழுங்கை,
மானிப்பாய்.

(9429)

யாழ். இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம்
08 - 02 - 1989 புதன்கிழமை
பி. ப. 2.30 மணிக்கு கல்லூரி
அதிபர் திரு. ச. பொன்னம்பலம்
தலைமையில் கல்லூரி மண்டபத்தில்
நடைபெறும்
[விரிவான நிகழ்ச்சி நிரல் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்]

இ. சங்கர்,
செயலாளர்.

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(C-1422)

## சாரண ஆசிரியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று 3ஆம் திகதி நடைபெறவிருந்த சாரண ஆசிரியர்களுக்கான கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்குப் பின்போடப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட உதவி சாரண ஆணையாளர் திரு. டோறஸ் இராஜலிங்கம் அறிவித்துள்ளார். (ச)

## ஊழியர் விசனம்

பச்சிலைப்பள்ளி, பெப். 3

யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பதவிகள் சிருஷ்டித்தல் படிவம் இல்லாததால் புதிய பதவிகளை உருவாக்க முடியவில்லை என உள்ளூராட்சி மன்ற ஊழியாளர் விசனம் தெரிவித்தனர். (க-117)

## ஆண்டு விழா

அம்பாறை பெப். 3

"கல்வி முன்னேற்ற நடவடிக்கைகளில் பொதுசன இயக்கங்களும் சிறந்த பங்காற்ற வேண்டும்"

நிந்தவூர் நன்நூல் இஸ்லாம இயக்கத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ஜனாப் ரி. இப்றுலெவ்வை மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் அல்ஹாஜ் ஏ சபீக் அகமது தலைமையில் விழா நடைபெற்றது. [க-14]

# உடுவில் வீட்டுத்தோட்ட போட்டியில் பரிசு பெறுவோர்

மானிப்பாய், பெப். 3

உடுவில் சமநல சேவை நிலையத்தினால் நடாத்தப்பட்ட சமநல சேவைநிலைய மட்டத்திலான வீட்டுத்தோட்டப் போட்டியில் முதலாவது இடத்தை இணுவில் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த திரு. க. செல்லையா பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட மட்டத்திலான வீட்டுத் தோட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு இவர் தகுதிபெற்றுள்ளார்.

உடுவில் சமநலசேவை மட்டத்திலான வீட்டுத் தோட்டப் போட்டிகளை உடுவில் சமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த போதனாசிரியை திருமதி ச. பதமநாதன், பாடவிதான உத்தியோகத்தர் (பயிர்பாதுகாப்பு) திரு. ப. கதிரமலை, சமநலசேவைப் பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

சுமார் 234 வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

இவர்களில் முதலாம் இடத்தை இணுவிலைச் சேர்ந்த திரு க. செல்லையாவும், இரண்டாம் இடத்தை சுதுமலைவடக்கைச் சேர்ந்த திரு செ. பொன்னம்பலமும் மூன்றும் இடத்தை ஏழாலை கிழக்கைச் சேர்ந்த திரு. க. பாலகிருஷ்ணனும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கு முறையே ரூபா 1000, ரூபா 500, ரூபா 250 பரிசாக வழங்கப்படவுள்ளது. (க-09)

## கேள்விப் பத்திரங்கள் கோரல்

## கமநலச்சேவைகள் திணைக்களம்

## யாழ்ப்பாணம் மாவட்டம்

கீழ்க்காணும் விவசாய வீதி லைப் புனரமைப்புச் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து யாழ்ப்பாண மாவட்ட கமநலச் சேவைகள் சிரேட்ட உதவி ஆணையாளரினால் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்

| வேலையின் பெயர் | அமைந்துள்ள கமநல சேவைப் பிரதேசம் | பதிவுத் தொகை |
|---|---|---|
| 1. அரியாலை நாவலடி கடற்கரை மணல்வீதி | நல்லூர் | ரூ. 200.000.00 |
| 2. வேலன் கண்டல் கிராஞ்சிவீதி புங்குடுதீவு | புங்குடுதீவு | ரூ 200.000 00 |
| 3. அட்டைக்குள வீதி | அம்பன் | ரூ 200.000 00 |

கேள்விப்பத்திரங்கள் 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை விநியோகிக்கப்படும். மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

க. பரமலிங்கம்
சிரேட்ட உதவி ஆணையாளர்
கமநல சேவை,
யாழ்/மாவட்டம்.

கமநலச் சேவைகள் திணைக்களம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்
1989 02 01.

C/1423

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி



### தில்லையம்பலம் துரைராசலிங்கம்

(பவுண், வேதா, சாந்தன்)

மலர்வு:- 1966- 09 - 03 உதிர்வு - 1988 11 - 06

வீரத்தாய் பெற்றெடுத்த அன்பு மைந்தா
பாசத்தால் உன்னை
"பவுண்" என்று பெயர் சூட்டி
பாரதனில் வளர்த்திடவே
இலட்சியத்தில் உறுதி கொண்டு
மனவலிமை மிளிர்ந்து நிற்க
"வேதா" என நாமம் சூட்டி
வனப்பு மிகு இளமையினை
வனந்தரத்தில் கழித்ததனையே
தாயகத்திற்காய் தியாகத்துடன்
மண்ணையும்
மனுடத்தையும்
நீ நேசித்தமையால்
மரணத்தை தழுவினையோ!

உமது பிரிவில் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரி,
அண்ணன்மார், அத்தான், அண்ணிமார்,
உறவினர்கள், நண்பர்கள்

புதுக்குடியிருப்பு. (C-1421)

## எமது புதிய வெளியீடு

(1) அ ரீஸ் — ஸ்ரீதேவி சுஹாசினி

"லட்சியப் போராட்டம்"
(தமிழ் வண்ணப் படம்)

இவ்வார வெளியீடுகள்:-
(1) அம்பிகாபதி
(2) முதல்தேதி
(3) சுமங்கலியின் கோலம்
(4) இனிய கீதங்கள் (புதிய பாடல்கள்)
(5) என்றும் இனியவன் (பழைய பாடல்கள்)
(6) A NIGHTMARE - Part I
(7) A NIGHTMARE - Part II (ட்ரகுலா படம்)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

C/1425)

## Our Sincere Thanks

We wish to thank all who attended our wedding and gave their blessing and presents at Thirugnanasambanthar Aatheenam on the 29th of January, 1989 We regret that we are unable to thank individually.

Chandrapalan Thamayanthi
"Nithy Nihedham"
53, Stanley Road,
Jaffna.

(9433)

## ஆறும் மாத நினைவு அஞ்சலி



செல்வன்

### குலசேகரம் உதயகுமார்

தோற்றம்: 17 - 11 - 1958 மறைவு: 08 - 08 - 1988

திதி:- 02 - 02 - 1989

ஆறு மாதங்கள் போனதுவோ
ஆருயிர் உங்களை மறப்போமோ
வாடியே துடிக்கின்றோம்.
வந்தெம்மை பார்க்க மாட்டீர்களோ?
உன் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்தித்து உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

27, நொச்சிமோட்டை,
ஓமந்தை.

(8937)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



### ★ சாரங்கி ஜெயகுமாரன் ★

ஜெயகுமாரன் - ஜசோதா தம்பதிகளின் செல்வப் புதல்வி சாரங்கி 03-02-1989 இன்று தனது இரண்டாவது பிறந்த நாளை ஞான வைரவரின் அருளால் கொண்டாடுகின்றார். இவரைக் கட்டுநாயக்கா அம்மா, அப்பா, ஆனைக்கோட்டை அப்பப்பா, மாமி, ஜேர்மனி சித்தப்பா, காங்கேசன்துறை அம்மப்பா, அம்மம்மா கனடா மாமா, இந்தியா அன்ரி, உறவினர், நண்பர்கள் சிறப்பாக வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

வி. நடராஜா

"தாய் அகம்"
வண் - வட மேற்கு,
ஆனைக்கோட்டை.

(8930)



## பேக்கறி வேலை

பேக்கறி வேலை தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசப்படும்

10-2-89 ற்கு முன் தொடர்பு கொள்ளவும்

**K. T. R. பேக்கறி**
குளத்தடி, தையிட்டி,
காங்கேசன்துறை.

(8935)



25 ஆவது வாரமாக இந்தியாவில் ஓடிக்கொண்டிருக்கும்
ஏ. வி. எம். புரொடக்ஷன்
"பாட்டி சொல்லைத் தட்டாதே"
கொழும்பிலும், யாழ்நகரிலும் ஒரே நேரத்தில் காண்பிக்கப்படுகிறது.

**நியூசாந்தி வெண்திரையில்**
(யாழ்நகர்)
ரசிகப் பெருமக்களை மகிழ்விக்க
இன்றுமுதல் காட்சியளிக்கின்றது.
தினசரி 10-30, 2-30, 5-30 3 காட்சிகள்

**பாண்டியராஜன், ஊர்வசி**
மனோரமா, செந்தில், சில்க்ஸ்மிதா
நடித்த

**பாட்டி சொல்லைத் தட்டாதே**
(ஈஸ்ட்மன் கலர்)
குழந்தைகளுடன் பார்க்கவேண்டிய
குதூகலச் சித்திரம். (C 1420)



உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ ஆண்டு தைத்திங்கள் 21 ஆம் நாள் (03 - 02 - 1989) வெள்ளிக்கிழமை காலை 09.03 மணி தொடக்கம் 10.33 மணிக்குள் ★ வரும் மீன லக்கின சுபவேளையில் ★

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**பரமேஸ்வரன் (A. O)**
அவர்களுக்கும்

எமது ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**புவனேஸ்வரி**
அவர்களுக்கும்

கலட்டி அம்மன் கோயிலில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கு தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. தி. சுப்பிரமணிய
தம்பதியர்
3 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

திரு. ப. பாலசுந்தரம்பிள்ளை
தம்பதியர்
[Retd Customs Officer]
83/11, தஞ்சி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(8910)


# சேதம் அடைந்த வீடுகளைத் திருத்த மக்கள் வங்கியின் கடனுதவி

## யாழ். பிராந்தியத் தலைமை அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம் பெப் 3

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்திக் கொள்வதற்கு மக்கள் வங்கி கடனுதவிகளை வழங்கவிருக்கிறது. இது சம்பந்தமான கடிதங்கள் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்து மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய தலைமை அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தன.

சம்பந்தப்பட்ட கடனுதவிகள் பற்றி அந்தக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் வருமாறு:—

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அசம்பாவிதங்களின் போது சேதமடைந்த வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் திருத்திக் கொள்வதற்கு கடனுதவிகள் வழங்கப்படும்.

வீடுகளைத் திருத்திக் கொள்வதற்காக ஐம்பதாயிரம் ரூபா முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரையும், வர்த்தக நிலையங்களைத் திருத்திக் கொள்வதற்காக இரண்டு லட்சம் ரூபாவும் கடனாக வழங்கப்படும்.

வீடுகளைத் திருத்திக் கொள்வதற்கென வழங்கப்படும் கடன் இருபது வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அதற்கு ஆறு சதவீத வட்டி அறவிடப்படும்.

வர்த்தக நிலையங்களைத் திருத்திக் கொள்வதற்கு வழங்கப்படும் கடன் பத்து வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அதற்கு ஒன்பது சதவீத வட்டி அறவிடப்படும்.

இந்தக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு காணி உறுதிகள் வங்கியில் பிணையாக வைக்கப்பட வேண்டும்.

சேதமடைந்த வீடுகளையும், வர்த்தகக் கட்டடங்களையும் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அதிபர்கள் அல்லது உதவி அரசாங்க அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இதேவேளையில் கடன் வழங்கப்படுவதற்கு முன்னர் வங்கியைச் சேர்ந்த விசேஷ குழு ஒன்றும் சேதமடைந்த வீடுகளையும் கட்டடங்களையும் பார்வையிட்டு கடன் வழங்கப்படுவதற்கான அத்தாட்சியை உறுதிப்படுத்தும்.

கடன் சம்பந்தப்பட்ட மொத்தத் தொகையும் ஒரே தடவையில் வழங்கப்பட மாட்டாது. பகுதி பகுதியாகவே திருத்த வேலைகள் மேற்கொள்ளும் அடிப்படையை வைத்து கடன் தொகை வழங்கப்படும்.

மாதாந்தம் ஆயிரத்து ஐநூறு ரூபா வருமானம் பெறுபவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபா முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

# மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

## இட நெருக்கடியைத் தீர்க்க ஆண்டு 6இல் மற்றொரு பிரிவு

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரியில் ஆறும் ஆண்டில் நிலவிய அனுமதிக் கெடுபிடிகள் தளர்ந்துள்ளன.

இக்கல்லூரியில் ஆறும் ஆண்டு வகுப்பில் புதிய பிரிவு ஒன்றை ஆரம்பித்து மேலும் நாற்பது மாணவிகளைச் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகத்திற்கு பெற்றோர்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்தனர்.

முன்னர் இக்கல்லூரியில் ஆறும் ஆண்டில் ஐந்து பிரிவுகள் இருந்தன.

பின்னர் இடநெருக்கடி, ஆசிரியர் பற்றாக்குறை ஆகியவற்றினால் ஒருபிரிவு மூடப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சபை கல்விப் பணிப்பாளருக்குச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து உடனடியாகவே ஐந்தாவது பிரிவை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தெரிவுப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே புதிய பிரிவுக்கு மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தெரிவித்தார். (இ- 118)

## விலை உயர்வால் பாதிப்பு

அதிகரிக்கப்பட்ட விலைகளிலேயே தற்போதும் உணவுப் பண்டங்களும் சிற்றுண்டிவகைகளும் தொடர்ந்து விற்பனையாகின்றன.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாகவும், போக்குவரத்து இடர்ப்பாடுகள் காரணமாகவும் ஏற்பட்ட விலை அதிகரிப்பு தற்போதும் தொடர்ந்து இருந்து வருகின்றது.

கோதுமை மாவின் விநியோகம் சீரடைந்த போதிலும் பாண், பணிஸ் என்பவற்றின் விலை முன்னைய விலைக்கு இறங்க மறுக்கிறது.

சாப்பாட்டு பார்சல், சிற்றுண்டிவகைகள் என்பவற்றின் விலையேற்றத்தினால் பாவனையாளர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ - 27)

## நியமனம்

கோப்பாய், பெப். 3

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலைக்கு தற்போது ஒரு ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-78)

# பண்ணிசை வகுப்புகளுக்கு பாலர்களை அனுப்ப வேண்டும்

மானிப்பாய், பெப். 3

நமது சமய வளர்ச்சியில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். பாலர்களைப் பண்ணிசை வகுப்புகளுக்கும் சைவப் பாடசாலைகளுக்கும் பெற்றோர்கள் தவறாது அனுப்பவேண்டும்.

மானிப்பாய் இந்து சமய விருத்திச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய செயலாளர் திரு சி. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார். கூட்டத்துக்கு திரு பொ. தி. சம்பந்தபிள்ளை தலைமை வகித்தார்.

சங்கத்தின் முன்னைநாள் தலைவர்கள் திரு வி. முத்துவேற்பிள்ளை, திரு வை. மகேசன், திரு சாரி மற்றும் பலரின் மறைவுக்கு கூட்ட ஆரம்பத்தில் இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. (க-90)

# வித்தியின் வாழ்வு வரலாற்றில் ஒரு சகாப்தம்

## அமைச்சர் இராசு அஞ்சலி

கொழும்பு, பெப்

பேராசிரியர் வித்தியானந்தன் வாழ்வு தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் ஒரு சகாப்தமாக அமைகிறது.

அமைச்சர் திரு. செ. இராசதுரை இப்படித் தெரிவித்தார்.

பேராசிரியரின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கும் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிறு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

மலையக கலை இலக்கியப் பேரவை ஒழுங்கு செய்த இக்கூட்டத்திற்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர் திரு. செ. குணரத்தினம் தலைமை வகித்தார்.

அமைச்சர் இராசதுரை மேலும் சொன்னதாவது:-

பேராசிரியரை நினைவு கூரும் வகையில் அவரது மாணவர்கள் அவர் பெயரில் ஆராய்ச்சி நூலகம் ஒன்றை நிறுவவேண்டும்.

பேராசிரியரின் பல்வேறு நூல்களையும் தொகுத்து நூல் வடிவில் வெளியிடவேண்டும். அப்படி ஒரு நூலை அச்சிட்டுப் பதிப்பித்துத் தரும் பொறுப்பை நான் எந்த நிலையில் இருப்பினும் ஏற்றுக்கொள்வேன் — என்றார். (ஒ-எ)

## அறிமுக விழா

குருநகர், பெப். 3

யாழ் - இன்ஸ்ரிடியூட் ஒப்டேற்ரு புரோசஸ்சிங் (ஐ. டி. பி.) நிறுவன மாணவர் மன்ற கையெழுத்துப் பத்திரிகை "கம்பியூட்டர்" இதழின் அறிமுக விழா இம்மாதம் 5ஆம் திகதி ஞாயிறு மாலை மல்லாகம் கிளை நிறுவனத்தில் நடைபெறும். (இ-51)

# காத்திரமான விமர்சனம் நல்ல எழுத்தாளனை உருவாக்கும்

கொக்குவில், பெப். 3

அறுபது களின் காலப் பகுதியில் காத்திரமான விமர்சனம்தான், எழுபது எழுபத்தைந்து காலப்பகுதியில் நல்ல எழுத்தாளர்கள் பலர் உருவாகக் காரணமாக இருந்தது. இன்று ஆய்வுரையும், விமர்சனமும் மலினப்பட்டும் போயுள்ளன. செக்ஸையும், சிவலிங்கத்தையும் ஒன்றாகப் பார்க்கின்ற ஒரு நிலை காணப்படுகிறது. இப்படியான நிலை ஈழத்து இலக்கிய உலகில் நல்ல விளைச்சலைத் தராது.

துரை எங்கரசுவின் 'வாழ்க்கை ஒரு தேவை' சிறுகதைத் தொகுதி வெளியீட்டில் விமர்சனவுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "துரைஎங்கரசுவின் சிறுகதைகள் கனமான காத்திரமான கதைகள்' அந்தவகையில் விமர்சிக்கப்பட வேண்டிய தகுதி இவருக்குண்டு.

அதுவே இவருக்கு ஒரு வெற்றி. வாழ்க்கை ஒரு தேவையா? வாழ்க்கை ஒரு சுமையா? வாழ்க்கை ஒரு சுவையா? என்ற வினாக்களில் வாழ்க்கை ஒரு தேவை என்ற பகுதியில் அவர் நிற்கின்றார்". இப்படி அவர் கூறினார்.

பட்டப்படிப்புக் கல்லூரி மண்டபத்தில் இரா. சிவச்சந்திரன் தலைமையில் இந் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது [க- 69]

# வர்த்தமானி தாமதம் பலர் விண்ணப்பிக்கவில்லை

பச்சிலைப்பள்ளி, பெப் 3

உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் ஊழியர்களை எழுதுவினர் வகுப்பு II 'ஆ'க்கும் தட்டெழுத்தாளர் வகுப்பு II 'ஆ'க்கும் பதவி உயர்த்தும் போட்டிப் பரீட்சைக்கான அறிவித்தல் அடங்கிய வர்த்தமானி சமீபத்தில்தான் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைத்தது.

விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 16 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் தாம் விண்ணப்பிக்க முடியவில்லை என பல ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதுவரை இப்பரீட்சைக்கு உள்ளூராட்சி பணிப்பாளரினால் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டு வந்தது.

இதனால் இவ்வருடம் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதுவும் உரிய நேரத்தில் கிடைக்காததாலும் தாம் விண்ணப்பிக்க முடியவில்லை என அவர்கள் கவலை தெரிவித்தனர். (க-117)

## புதிதாக தெரிவான 7 ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம் பெப் 3

சேவைக்கால முன்பயிற்சிக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் ஏழு ஆசிரியர்களின் பெயர்கள் புதனன்று கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

அந்த எழுவரின் விவரம் வருமாறு:-

எஸ். சுபாசினி மட்டுவில் தெற்கு, எஸ். கிரிகா நீர்வேலி வடக்கு, எஸ். சிவயோகம் மீசாலை தெற்கு, ரி. தங்கராணி மீசாலை, பி. பாலஜீவனி சாவகச்சேரி, கே. குமுதினி யாழ்ப்பாணம், ... முத்தை பருத்தித்துறை. (இ-16)

## விவசாயக் கடன்

பச்சிலைப்பள்ளி, பெப் 3

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் இந்திராபுரம், வண்ணன் கேணியிலுள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயக் கடனாக இருபதினாயிரம்ரூபா வீதம் வழங்கியுள்ளதாக சமாசச் செயலாளர் ... இதனைத் தெரிவித்தார். (இ-117)

# கைஸ் ஓவியக் கண்காட்சி

திருகோணமலை, பெப். 3

மாணவர் இளைஞர் பொது மன்றத்தால் "வாழ்ந்த வாழ்வும் வளரும் நாட்களும்" எனும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் திருகோணமலை சண்முகநாத வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஓவியக் கண்காட்சி ஓவியர் தாபி சுப்பிரமணியம் (அதிபர்) ஓவியர் மரிக்கார் ஆகியோரால் திறந்து வைக்கப்படும்.

ஓவியக் கண்காட்சியில் திருமலை மாணவர்களின் ஓவியங்களும் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலும், பருத்தித்துறை, தெல்லிப்பளை போன்ற இடங்களிலும் இந்த ஓவியக் கண்காட்சி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.


# "M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும்
## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

1. Excavator Operator — 1 Vacancy
2. Grader Operator — 1 ,,
3. General Electrician — 2 ,,
4. Diesel, Petrol Mechanic — 2 ,,
5. Car Wiring Mechanic — 1 ,,

(4, 5: ஆங்கில அறிவு ஓரளவு அவசியம்)

## SHIP VACANCIES
கப்பல் வேலைவாய்ப்புக்கள்

| | | | | Salary |
|---|---|---|---|---|
| 1. | Second Engineer | — 5 | Vacancies | — Open |
| 2. | Rigger | — 32 | ,, | — ,, |
| 3. | Chief Mate | — 5 | ,, | — ,, |
| 4. | Mechanics (Ship) | — 10 | ,, | — 400 USD |
| 5. | Able Sea Men | — 10 | ,, | — 300 USD |
| 6. | Cooks | — 5 | ,, | — 300 USD |

★ புதிதாகக் கடவுச்சீட்டு வேண்டுபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

★★ எங்களிடம் புதுக் கடவுச்சீட்டு எடுப்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.

★★★ பொன்ட் (BOND) செய்து கொடுக்கப்படும்.

✶ நம்பிக்கை ✶ நாணயம்
என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

## 'M' THREE TRAVEL

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

"இந்திர பவனம்"
சோதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

இல. 1, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/ 1414)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**யாழ். கனகரத்தினம் ம. ம. வி.**
**பழைய மாணவர் சங்கம்**
**மணிவிழா மலர்**

மேற்படி மலரில் வெளியிட பழைய மாணவர் பெயர்ப்பட்டியல் திருத்தியமைக்கப்படுகிறது. தமது பெயர், விலாசம், தொழில், கல்வித்தகைமை, தொழில் தகைமை ஆகியவற்றை விபரமாக 15-2-89க்கு முன் அனுப்பி வைக்குமாறு சகல பழைய மாணவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

V. S. கனகரத்தினம்,
செயலர்.

ப. மா. ச.
கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம். (8934)


# புனர்வாழ்வு அமைச்சின் நிவாரணம்பெற வைத்திய சான்றிதழ் இல்லை

## அம்பாறையில் நூற்றுக்கணக்கான இளைஞர் பாதிப்பு

கல்முனை, பெப். 3

பூஸா, வெலிக்கடை, பெலவத்தை ஆகிய தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டு கொடூரமான சித்திரவதைகளுக்கு இலக்காகி உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு தொழில் செய்து சீவியம் நடாத்த முடியாமல் கஷ்டமுறும் அம்பாறை மாவட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான இளைஞர்கள், புனர்வாழ்வு அமைச்சின் நிவாரணங்களை பெறுவதற்கு வைத்தியச் சான்றிதழ்களைப் பெறமுடியாது கஷ்டமுறுகின்றனர்.

சம்மாந்துறை, வீரமுனை இளைஞர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர், உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தடுப்பு முகாம்களில் வைத்தே பாதிக்கப்பட்டவர்கள், வைத்திய சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு குணமடைந்தவர்களாக இருந்தாலும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிலர் சொந்தச் செலவில் அதாவது கடன்பட்டு வைத்தியம் செய்து சுகம் அடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கு புனர்வாழ்வு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

இப்படியானவர்களுக்கு வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களைப் பெறுவதற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இப்படி அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை, வீரமுனை இளைஞர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இதன் சார்பில் இதன் தலைவர் திரு. க. கணேசமூர்த்தி புனர்வாழ்வு அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி உள்ளார். (இ-84)

## சோதனை நடவடிக்கைதீவிரம்

யாழ்ப்பாணம், பெப் 3

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது சோதனை நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

அசற்றப்பட்ட அமைதிப் படையினரின் சென்றிகள் பழைய இடங்களில் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்திகள் எங்கும் இந்திய அமைதிப்படையினரும் தொண்டர் படையினரும் கூட்டாகச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பயணிகள் வாகனங்களும் வீதிகளில் மறிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இ-10)

## பாண்டிருப்பில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

கல்முனை, பெப் 3

பாண்டிருப்புக் கிராமத்தில் இரு குடும்பஸ்தர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு சடலங்கள் வீதியில் போடப்பட்டிருந்தது.

பாண்டிருப்பைச் சேர்ந்த மிளகாய் அரைக்கும் ஆலையில் வேலை செய்து வந்த செல்வராசா (வயது 43) பொற்சொல்லரான சிவஞானம் (வயது 30) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இருவரின்சடலங்களும் இந்தியப் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டன.

பிரேத பரிசோதனை, மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் சடலங்கள் கையளிக்கப்பட்டன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பாண்டிருப்பில் இரு வீடுகள் தீயிடப்பட்டன என்று தெரியவருகிறது (க-84)

## இ.மு.எ.ச. அனுதாபம்

யாழ்ப்பாணம், பெப். 3

'பேராசிரியர் தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ்க் கலைகளுக்கும் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக நாடகத் துறைக்கு உயிர்ப்பளித்த தன்மூலம் இத்துறைக்குப் புதிய ஊட்டத்தையும், பெருமதிப்பையும் வழங்கினர்.

தமிழை நேசித்த, தமிழ்க்கலைகளை நேசித்த இவர் தமிழ்த் தேசிய இனம் சொந்த மண்ணில் ஆட்சி அதிகாரத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழவேண்டும் என்று விரும்பினர். அதற்ாக உறுதியுடன் முன்வந்தார்'.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் மறைவுகுறித்துஇலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட இரங்கற் செய்தி மேற்கண்டவாறு கூறுகின்றது.

பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழ்ப் பணியை, கலைப்பணியை நமது ஏனைய பேராசிரியர்கள், ஆய்வறிஞர்கள், கலைஞர்கள் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் அவரது நினைவு கௌரவத்துடன் பேணப்படும். (க)

## கூட்டம்

முல்லைத்தீவு பெப். 3

முல்லைத்தீவு காரைதுறைப் பற்று ப நோ.கூ சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கூட்டம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ்.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும். [இ-92]

## அரசினர் வைத்தியசாலை அபி.சங்கம்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்; இ. க. குலசேகரம், உபதலைவர்கள்: திரு. வி. இராமநாதன், திரு. பொ. பூபாலசிங்கம், திரு.க. பொ. நடனசிகாமணி, செயலாளர்: திரு. க. செல்லத்துரை, உபசெயலாளர்; திரு. என். கனகரெத்தினம், பொருளாளர்; திரு, சு) ஏழூர்நாயகம். (ச-68

## துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது...

பண்டத்தரிப்பு, பெப் 3

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்புச் சந்தைப் பகுதியில் துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது மக்கள் பதற்றம் அடைந்தனர். கடைகள் சில அவசரம் அவசரமாகப் பூட்டப்பட்டன.

துப்பாக்கி சுடும் பயிற்சியே இந்தச் சத்தத்துக்குக் காரணம் என்று அறிய வந்தபோது வழமை நிலை திரும்பியது. (இ-120)

## நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், பெப் 3

கலை இலக்கியக் களம் நடத்தும் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் நினைவஞ்சலி தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நாளை (4 . 2 . 88) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (ந)

## ஆலங்கேணி விநாயகர் வித்தியாலயம்

யாழ்ப்பாணம், பெப் 3

ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் இருந்து ஜீ. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 90 வீதமான மாணவர்கள் திறமையாகச் சித்தி அடைந்துள்ளனர்.

11 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றினர். இதில் 10 மாணவர்கள் திறமையாக சித்தி அடைந்துள்ளனர்.

8 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கான அடிப்படைத் தகைமையும் பெற்றுள்ளனர். (க)

## விமர்சன அரங்கு

குருநகர், பெப். 3

மீரா வெளியீட்டகத்தின் நான்காவது நாவல் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய "முடிவல்ல ஆரம்பம்" நாவலின் அறிமுக விமர்சன அரங்கு 4 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு யாழ்-பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ-பல்கலைக்கழக தமிழ் மன்றத் தலைவர் திரு. பொ' அருந்தவநாதன் தலைமை வகிப்பார்.

திருமதி மௌ, சித்திரலேகா, கலாநிதி நா. சுப்பிரமணியன், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நூலினை விமர்சனம் செய்வர். (ந 5


2ஆவது ஜனத்திரள் வெற்றி வாரம்
ஹரன் வெண்திரையில்
10-30, 2-30 மட்டும்
சத்தியராஜ் நதியா
(இரு வேடங்களில்)
செந்தில், ரகுவரன், சுரேஷ், சீனிவாசன் நடித்த
ஓர் குடும்பச் சித்திரம்
BABY சுஜியின் அபார நடிப்புக்கு விழாவெடுத்து போற்றப்பட்ட சித்திரம்
மந்திரப் புன்னகை
(கலர்) (8933)


## 51 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வன்
**வீரகத்திப்பிள்ளை தர்மலிங்கம்**
**(ராஜாராம்)**

தாயின் மடியில்: 19 - 06 - 1955 — தரணியின் அடியில்: 15 12 - 1988

எமது அன்புச் செல்வமே!
உன் வாழ்வு முடிந்ததாகச் சொல்லப்படுகிறது: நீ மரணத்தைத் தழுவியதாகக் கூறப்படுகிறது.

இல்லை.........! இல்லை.........!
இலட்சிய தீபங்கள் அழிவதில்லை. நீ எம் நெஞ்சிலும் நினைவிலும் நிலைத்திருக்கின்றாய் காலமுள்ளளவும் உன் நினைவுகள் எமக்கு உயிரூட்டும். உன் காலடித் தடங்கள் எமக்கு வழிகாட்டும். இலட்சியங்களை பலரும் எளிதில் மறந்து விடும் இந்த உலகில் தாய் நாட்டிற்காக உன்னையே அர்ப்பணித்த எமதன்பே! எம்விழிகள் சொரியும் செந்நீரால் உன் பாதங்களை அர்ச்சித்து உனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அக்கா,
அத்தான், தம்பிமார், தங்கைமார்.
மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

வெற்றிலைக்கேணி,
முள்ளியான். (9409)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. M.G.ரவிச்சந்திரன் (ரவியன்)**
சட்டுவன் தெல்லிப்பழை

பிறப்பு: 12.6.1968 — இறப்பு; 31.1.1988

திதி: 3.2.1989

தமிழ் மண்ணின் மைந்த! இயற்கையின் ஓராண்டுமாற்றங்கள் எண்ணிலடங்காதவை. ஆண்டில் பலகோடி ஆயினும் உன்னினைவு உன்னிலடங்காதவை.

ஓராண்டல்ல -ஒருயுகமேயாயினும் மரணங்கள் நிச்சயம் மறுபிறவி எடுக்கும் விடுதலைத் தாயே! இம்மண்ணிற்காக எடுத்த மறுபிறவிகளை எல்லாம் அடைக்கலமிகு உன் சொத்தாக்கிக் கொள் ஏனெனில் மறக்கமுடியாத மாசற்ற உன் மாளிகையின் மாணிக்கப்படிகள் அவர்கள்!

மைந்த! உனக்காக அர்ச்சிக்கப்பட்ட மலர்களே இவை.

உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு.

ஆத்ம சாந்தி.

(8917) தாய், நண்பர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திவாகர் செல்லையா**
(முன்னாள் பண்டத்தரிப்பு ப நோ கூ. ச. சமாச முகாமையாளர்)


பூவுலகில்: 01-09-1914 — விண்ணில்: 04-01-1989

அன்புக்கும் பண்புக்கும் அறிவுக்கும் இருப்பிடமாய் இன்பமுடன் இல்லறம் நடாத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாதம்பை, மாதகல். — மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(8924)

## 90ஆம் நாள் அந்தியேட்டி நினைவஞ்சலி



செல்வன்
**சோமசுந்தரம் ஜெயக்குமார்**
[வருமானமேற்பார்வையாளர், உள்ளூராட்சித்திணைக்களம்]

தோற்றம்: 31 - 01 - 1953 — மறைவு: 09-11-1988


"எங்களின் துணையென எண்ணி மகிழ்ந்திருந்தோம் ஏங்கவைத்துவிட்டு இடைநடுவில் பிரிந்து விட்டீர் தாங்க முடியாமல் உம்பிரிவையெண்ணி ஏங்கி அழுகின்றோம் எந்நாளும் எம்மகனே"

06-02-1989 திங்கட்கிழமை எங்கள் அன்பு மகனின் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும் அதில்கலந்து கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

டச்சு ரோட்,
அளவெட்டி. — பெற்றோர்.

(9401)

## ஓராண்டு நினைவஞ்சலி



**க. நாதன்**
(புஸ்பநாதன்)

மண்ணில்: 30- 05 - 1952 — விண்ணில்: 16 - 01 - 1988

**சி. தவராசா**
(சலாம்)

மண்ணில்: 17 - 09 - 1956
விண்ணில்: 02 - 06 - 1988

**து. இருபாகரமூர்த்தி**
(குட்டி)

மண்ணில்: 27 - 12 - 1966
விண்ணில்: 10 - 09 - 1988

திதி: 03 — 02 — 1989

அன்பின் மகனே! அருமைச் சகோதரனே! அண்ணு! அண்ணு! நீ எங்கு சென்ருய்! கூறுயோ?
உன் நண்பர்கள் துணை என்று நாம் இருந்தோம்
அவர்களும் உம்முடன் வந்தார்களே விண்ணகம்
என்றும் உங்களின் நினைவால் வாடும் அன்பு! உள்ளங்கள்

அம்மா, மாமா,
சோதி (ஜேர்மனி) தம்பி, ரதி (ஜேர்மனி) மைத்துனி,
தங்கைகள், தம்பி, உற்ருர், உறவினர்,
நண்பர்கள்.

இணுவில். (8920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:
அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

பொருள்:
அஞ்சுகின்ற இயல்புள்ளவனாகவும், சமயோத அறிவில்லாதவனாகவும், நிதானமில்லாதவனாகவும் கொடைமனமில்லாத லோபியாகவும் உள்ளவன் பகைவர்களிடம் அடிதணிந்து விடவேண்டிய மிக்க பலவீனன்.

உதயன்
இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
03. 2. 1989 உ. பெ. இல23

# வீழ்ச்சி நோக்கும் நாட்டின் பொருளியல்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த வருடத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாக புள்ளி விவரங்கள் பேசுகின்றன, உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த நாட்டின் பொருளாதாரம் வளர்வதற்குப் பதிலாகத் தேய்ந்து போவதாகச் சுட்டிக் காட்டி உள்ளது.

வரட்சி காரணமாக உணவு உற்பத்தி ஆறு சதவீதம் வீழ்ச்சி கண்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. உள்நாட்டில் நிலவிய அமைதியின்மை காரணமாக சுமார் ஐந்து லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்தனர் என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1988 ஆம் ஆண்டு முடிந்து ஒரு மாதமே கடந்திருக்கிறது. நாட்டின் பொருளாதார தேர்ச்சி நிலை குறித்து மத்திய வங்கியோ அல்லது வேறு அரச நிறுவனமோ அறிக்கை வெளியிட மாதங்கள் இன்னும் பலவாகும். ஆனால் உலக வங்கி தலது அறிக்கையை வெளியிட்டு விட்டது.

இந்த நாட்டுக்கு பெருந்தொகை நிதி உதவி வழங்கும் சர்வதேச ஸ்தாபனங்களில் உலக வங்கி முன்னணி வகிக்கிறது. அதனால் அதற்கு இந்நாட்டின் வளர்ச்சி, அபிவிருத்தி பின்னடைவு என்பனவற்றில் அதிக அக்கறை இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, 1988 இன் பொருளாதார நிலைமையை அது மதிப்பிட்டு முடித்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அதனது அமைச்சர்கள், தமது திறந்த பொருளாதாரத் திட்டத்தால் நாட்டின் பொருளாதாரம் ஓங்கி வளர்வதாகப் பெரும் ஓலமிட்டு மேடைகளில் முழங்கி வந்ததைக் கேட்டோம். அபிவிருத்தி அதிதமாக வளர்ந்து வருவதாகக் கூறக் கேட்டோம்.

ஆனால் அவை எல்லாம் வெற்று வேட்டுக்கள் என்பதை அரசின் ஆத்ம நண்பனை உலக வங்கியே புட்டுக்காட்டி விட்டது. அபிவிருத்தி, அரசுக்கு நெருங்கியவர்களுக்கும், அதன் சகபாடிகளுக்கும் தானே என்று கேட்கத் தோன்றுகிறது.

நாட்டின் நிதி வளத்தில் பெரும் பகுதி பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கப்பட்டு வந்ததை இந்த நாட்டு மக்கள் இலகுவில் மறந்துவிட முடியாது. வன்செயல்கள் பெருகப் பெருக, பாதுகாப்புச் செலவு ஒதுக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர்ந்து செல்வது இயல்பு.

1988-தமிழ் பகுதிகளில் மட்டுமல்லாது தென் பகுதியிலும் வன்செயல்களின் (அவற்றை யார் செய்தார்கள் என்ற கேள்வியை ஒதுக்கிவிட்டு) சாதனை கண்ட ஆண்டு அதன் காரணமாக பாதுகாப்புச் செலவு, மதிப்பிட்டதை விட, ஒதுக்கியதை விட, உயர்ந்து செல்லும் சாத்தியம் இருந்தது. அல்லவா?

அது மட்டுமன்றி, அமைதியின்மை காரணமாக, தொழில் துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. விவசாயமும் வீழ்ச்சி நோக்கியது. மொத்தத்தில் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டது என்பதற்கு மறுபக்கம் இல்லை.

நுண்ணியதாக ஆராய்ந்தால் பொருளாதார வீழ்ச்சிக்கு அமைதியின்மையே காரணம் என்பது கண்கூடு.

எனவே வன்செயல் புரிந்தவர்களை விட, அரசாங்கமே அமைதியை நிலைநாட்டுவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். 1988 டிசம்பர் 31 வரை அரசு அந்தத் திசையில் ஆர்வத்துடன் இறங்கியதாகச் சொல்வதற்கில்லை.

இந்த வருடத்திலும் ஒரு மாதம் ஓடி விட்டது. அமைதி வருவதற்கான அறிகுறிகள் ஒரு பொட்டாகத் தானும் புலப்படவில்லையே!

வன்செயல் புரிபவர்கள் தாமாக வருவார்கள் என்று எதிர்பார்த்து இருக்காமல் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஜனாதிபதி அவர்களை நாடிச் செல்வதில் தப்பு என்ன?

நாட்டுக்கு — மக்களுக்கு — வேண்டுவது அமைதி தான் என்று அரசு உண்மையிலேயே புரிந்து கொண்டால், அப்படிச் செய்து பார்த்தால் என்ன? முயற்சி போல் எதுவும் உதவாதே!

## கம்பியூட்டர் அடையாளக் கார்ட்

லண்டன், பெப் 2

கம்பியூட்டர் மூலம் அடையாளக் கார்டை அச்சிடும் முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறைந்த செலவில் இரசாயனமாற்று புகைப்படத்துக்குத் தேவையான விசேட கடதாசி ஆகியவற்றின் உதவியின்றி அடையாளக் கார்ட்டை கம்பியூட்டர் மூலம் அச்சிடும் முறை லண்டனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 'கொம்பிக்' (Compic) என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் முழு அர்த்தம் Computer Produced Identity Card என்பது.

விண்ணப்பதாரரின் முழு விவரங்களும் 'கீபோர்'டின் மூலம் கம்பியூட்டருக்கு வழங்கப்படுகிறது. அவரின் புகைப்படம் அல்லது எடுக்கப்பட்ட புகைப்படத்தின் பிரதிலகயெழுத்து ஆகியனவும் வழங்கப்படுகிறது. பின்னர் லேசர் அச்சிடுதல் முறை மூலம் அச்சிடப்படுகிறது. (எ)

# கொன்ரு கெரில்லாக்களுடன் சமரசம்; நிக்கரகுவா அரசின் புதிய முயற்சி

மனகுவா, பெப் 2

நிக்கரகுவா அரசுக்கு எதிரான கொன்ரு கிளர்ச்சிக்காரர்களின் ஆயுதக் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதில் திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒற்றேகா நேற்று தனிப்பட்ட முறையில் ஹொண்டுரஸ் ஜனாதிபதியைச் சந்தித்து இதுபற்றி விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

ஹொண்டுஸ், நிக்கரகுவாவின் எல்லைப்புற நாடாகும். அங்கு இருந்துகொண்டு தான் கொன்ரூக் கெரில்லாக்கள் நிக்கரகுவா இடதுசாரி அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தைப் பல ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர்.

கொண்டுருஸ் அமெரிக்க சார்புநாடாகும்.

கிளர்ச்சிக்காரர்களுடன் நிக்கரகுவா நடத்தி வந்த சமரசப் பேச்சுக்கள் முறிவடைந்து ஒரு வருடமாகி விட்டது.

கிளர்ச்சிக்காரர் தலைவர்கள் நிக்கரகுவாவை விட்டு வெளியேறி ஹொண்டுரஸில் தற்சமயம் தங்கி இருக்கின்றனர்.

நிக்கரகுவா அதிபரின் திட்டப்படி, கிளர்ச்சிக்காரர்கள் அனைவருக்கும் நிபந்தனையற்ற பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளர்ச்சிக்காரர்களை சமரசப் பேச்சுக்களில் கலந்து கொள்ளச் செய்யும்படி திரு ஒற்றேகா கொண்டுரஸின் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார். (எ)

## தேர்தல் ஒத்திவைப்பு

பக்தாத், பெப் 2

ஈராக் நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் மாதத்துக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளதாக அரசு அறிவித்தது.

முன்னர் மார்ச் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது (எ)

## பெனஸிர் அறிவிப்பு

இஸ்லாமபாத், பெப்2

இந்தியாவின் முன்னாள்பிரதமர்மொரார்ஜி தேசாய்க்கு வழங்குவதாக மறைந்த அதிபர் ஸியா-உல்-ஹக் அறிவித்த விருதை நான் கொடுக்க மாட்டேன்.

இப்படி பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ தெரிவித்தார்.

மொராஜிக்குப் பதில் ஒரு பாகிஸ்தான் தொழிலாளிக்கு இந்த விருதை நான் வழங்குவேன்' — என்றும் அவர் சொன்னார். (எ)

## மூப்பனார், சிதம்பரம் பதவி விலக காங்கிரஸ் எம்.பி வேண்டுகோள்

சென்னை, பெப் 2

தமிழ்நாடு தோல்விக்கான பொறுப்பை ஏற்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மூப்பனாரும் மத்திய அமைச்சர் ப. சிதம்பரமும் பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பிரபல காங்கிரஸ் எம். பி திண்டிவனம் பி. இராமமூர்த்தி இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

திரு இராமமூர்த்தி மேலும் சொன்னதாவது

மூப்பனாரும் சிதம்பரமும் இராஜினாமாச் செய்யத்தவறினால் அவர்களைப் பதவியில் இருந்து விலக்கி விட வேண்டும்.

தேர்தலில் தனித்துப் போட்டியிடும்படி இருவரும் கூறி பிரதமரைத் தவறாக வழிநடத்திவிட்டார்கள்.

பழைய பெருச்சாளிகளை அகற்றி காங்கிரஸுக்கு புத்துயிர் ஊட்ட வேண்டும்,

ஜெயலலிதா அணியுடன் காங்கிரஸ் ஒரு தேர்தல் உடன்பாடு கண்டிருக்க முடியும்.

தொகுதிகளைச் சமமாகப் பங்கிட்டு முதல் அமைச்சர் பதவியை தேர்தலுக்குப் பின்னர் தீர்மானிப்பதாகக் கூறியிருந்தால் ஜெயலலிதா அதற்கு இணங்கியிருப்பார்.

'தனிப்பட்ட பெருமை'யைக் காப்பதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் இதற்கு உடன்படவில்லை.

இப்படி திண்டிவனம் இராமமூர்த்தி சொன்னார். (எ)

ஐக்கிய அரபு எமிரேற்றில்

## வெளிநாட்டவர் இடத்துக்கு உள்நாட்டவர் நியமனம்

ஐக்கிய அரபு எமிறேற்சு அரசு தனது நாட்டில் அரசுத் திணைக்களங்களில் பணிபுரியும் வெளிநாட்டவர்களை விலக்கி விட்டு, அவர்களின் இடங்களுக்கு உள்நாட்டவர்களை நியமிக்க உள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக இத்திட்டம் அமுலுக்கு வரும் என்று டுபாய் பத்திரிகை அல்-பயான் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிறேற்சு நாட்டின் அரச திணைக்களங்களில் பணிபுரியும் சுமார் 45 ஆயிரம் ஊழியர்களில் மூன்றில் ஒரு பங்கினர் வெளிநாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரெஞ்சுத் தலைவர் இந்திய விஜயம்

புதுடில்லி, பெப் 2

பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் நேற்று புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

ஜனாதிபதி வெங்கடராமன், பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் அமைச்சர்கள் பிரெஞ்சுத் தலைவரை வரவேற்றார்கள். (எ)

## மிஸோரம் தேர்தலில் மோசடி எனப் புகார்

அயிஸவால், பெப் 2

மிஸோரம் சட்டசபை தேர்தலில் மோசடி இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

மிஸோரம் தேசிய முன்னணித் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு லால்டெங்கா இக்குற்றச்சாட்டை சுமத்தினார்

காங்கிரஸ் அரசு மாநிலத்தில் கவிழ்க்கப்படும் வரை எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படும் என்றும் திரு லால்டெங்கா அறிவித்தார்.

மிஸோரம் மாநிலத்தில் அண்மையில் நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது தெரிந்ததே. (எ)

## முதல் சந்திப்பு

வாஷிங்டன், பெப் 2

ஜப்பானியப் பிரதமர் தாகேஷிட்டா நேற்று வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்தார்

புஷ் பதவி ஏற்றதன் பின்னர் அவரைச் சந்திக்கும் முதலாவது வெளிநாட்டுத் தலைவர் ஜப்பானியப் பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கல்லெறியும் இளைஞர் மீது பிளாஸ்டிக் குண்டினால் சூடு!

இராணுவத்தினர் மீது கல்லால் எறியும் பலஸ்தீனிய இளைஞர் மீது பிளாஸ்டிக் குண்டுகளால் சுடும்படி இஸ்ரவேல் அரசு நேற்று தனது ஆயுதப்படைகளுக்கு உத்தரவிட்டது.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களை மீட்கும் கிளர்ச்சியின் ஒரு கட்டமாக பலஸ்தீனிய இளைஞர்கள் இஸ்ரவேலிய ராணுவத்தினரைக் கண்டதும் அவர்கள் மீது கல்லெறிந்து தாக்கி வருகின்றனர். அப்படிக் கல்லெறிந்த 6 பலஸ்தீன இளைஞருக்கு இரண்டு வருடச் சிறைத்தண்டனையை இஸ்ரவேலிய இராணுவ நீதிமன்றம் விதித்தது தெரிந்ததே.

கல்லெறிவது அதிகரித்து வருவதால் இப்போது பிளாஸ்டிக் குண்டுகளால் சுடுவதற்கு இஸ்ரவேலிய ராணுவத்திற்கு அதிகாரம் வளங்கப்பட்டுள்ளது. (எ)

## உச்சிமாநாடு

பீகிங், பெப். 2

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வாட்நேசே சீன அரசுத் தலைவர்களுடன் பேச்சை நேற்று ஆரம்பித்தார்.

சீன — சோவியத் தலைவர்களுக்கு இடையே உச்சிமாநாடு ஒன்றுக்கு இப்பேச்சுக்கள் வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# பாடசாலைகள் சமுதாயவளர்ச்சியை பிரதிபலிக்கும் மையமாக வேண்டும்

## பாராட்டு விழாவில் உரை

சரவெட்டி பெப் 3

பாடசாலைகள் சமூகத்தின் வளர்ச்சியைப்பிரதிபலிக்கும் மையமாக அமைய வேண்டும்.

சரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களினால் வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகத்துக்கு நடத்தப்பட்டபாராட்டு விழாவில் யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் சிவத்தம்பி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இப்பாடசாலையினைத் தான் கரவெட்டியினுடைய நவீன மயப்பாட்டை நாம் பிற உலகிற்கு தெரியப்படுத்தக் கூடியதாயிருக்கிறது. இப்பாடசாலையில்படித்தவர்கள் கல்வித்துறையிலும் பெரிய நிறுவனங்களிலும் உயர் பதவிகளை வகித்து வருகின்றனர்.

கரவெட்டிக் கிராமம் பல்வேறு முரண்பாடுகளிடையே ஒன்றிணைக்கின்ற தன்மையை உடையதாகவிருக்கிறது.

திரு. சபாநாயகம் இப்பாடசாலைக்குச் செய்யும் உதவி இப்பிரதேசத்திற்கு செய்யும் உதவி ஆகும்.

ஹாட்லிக் கல்லூரி முதல் விநாயக வித்தியாலயம் வரை உள்ள பாடசாலைகளில எத்தனை வேறுபாடுகளைக் காண்கின்றோம்.

சிறந்த பாரம்பரியங்களைக் கொண்ட பாடசாலைகள் இருக்கின்ற இக்கல்விக் கோட்டத்துக்கு ஒரு கல்வி வரலாறு இல்லாதது குறை.

இப்படி அவர் கூறினார்

பிரதம கல்வி அதிகாரி திரு க. சந்தசாமி யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. குணசிங்காசா, திட்டமிடல் பணிப்பாளர் திரு செ சுவாமிநாதன் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர்.

சங்கீத பூஷணம் திரு செ. குமாரசாமி வாழ்த்துப்பா பாடினார் பாடசாலை அதிபர் க. சிவபாதசுந்தரம் அறிமுகம் செய்து வைத்தார்.

கல்விப்பணிப்பாளர் திரு. சபாநாயகம் பதுலுளை ஆற்றுகையில் முந்தின காலத்தில்கல்வித்துறையை கடைசிப்படியாகவைத்திருந்தார்கள் அதாவது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதும் ஆசிரியர் வேலை எடுப்பது அதிலிருந்து வேலைகளுக்கு மாற்றுப்பது வழக்கம். இன்றைய அரசாங்கம் பட்டதாரிகளுக்கு சிறந்த சம்பளம் வழங்குவதால் கூடுதலான பட்டதாரி ஆசிரியர்களை ஈர்க்க முடிகிறது.

கட்டிடங்கள் முக்கியமல்ல. கல்விதான் எமது நிலையான சொத்து கல்வியை பரப்ப வரம்பின்றி கற்க வேண்டும். எங்களில் பலர் பாடசாலைப்படிப்பை முடித்து விட்டால்படிப்புமுடிந்து விட்டது என கருதுகின்றார்கள். ஆனால் நாம் கட்டையில் போகும் வரை கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார் மாணவ முதல்வ தலைவர் திரு இ. [illegible] நன்றியுரை வழங்கினார். (இ-70)

## இலங்கைத் தமிழர் மறைம் வாழ்த்து

யாழ்ப்பாணம், பெப் 3

திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள மகத்தான வெற்றி மூலம் தமிழகத்தின் எதிர்காலம் வளமுள்ள ஒளிமயமாகின்றது. இதில் ஈழத் தமிழர்களாகிய நாம் பெருமிதமும், நம்பிக்கையும் அடைகிறோம்.

யாழ்ப்பாணம் இலங்கைத் தமிழர் மன்ற செயலாளர் திரு மு. மகாலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ - 10)

## பரஸ்பர சகாயநிதிச்சங்கம்

யாழ்ப்பாணம் பெப் 3

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்க லிமிட்டெட்டின் யாழ்ப்பாணக்கிளை 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது

இல 507 இல் உள்ள இக்கிளையை சங்கத்தின் தலைவர் திரு.வே இ. புவனேஸ்வரன் திறந்து வைப்பார்

சங்கத்தின் தலைமைக் காரியாலயம் வட்டுக்கோட்டையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சமய சிந்தனை

## குடமுழுக்கு விழா

யாழ்ப்பாணம் பெப் 3

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சுற்றுப்பிரகாரக் கோவில் குடமுழுக்கு விழாவும் புவனேஸ்வரி அம்மன் சிலாவிக்கிரகப் பிரதிஷ்டையும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. (க)

## பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம். பெப் 3

வயாவிளான் ஞானவைரவர் ஆலயம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்வதற்காகப் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. (க)

## நயினாதீவுச் சாமியார் குருபூசை

யாழ்ப்பாணம், பெப் 3

நயினாதீவுச் சாமியார் என்று அழைக்கப்படும் நயினை ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளின் நாற்பதாவது குருபூசை நாளை சனிக்கிழமை மாலை நடைபெறும்

நயினாதீவில் உள்ள சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் நடக்கும் குருபூசையின் போது விசேட அபிஷேக ஆராதனைகளும், பிரார்த்தனைகளும், நண்பகலில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (அ)

## கிராம அபிவிருத்தியில் மாதர் முன்னேற்றச் சங்கம் முன்னின்று உழைக்க வேண்டும்

கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்கள் முன்னின்று உழைக்க வேண்டும் எதற்கும் அரசாங்கத்தை நம்பியிராது எங்களை நாங்களே ஆளும் நிலமை உருவாக வேண்டும்.

வேலணை கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. கே. கணேசலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலணை கிழக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட திரு சமாணிக்கவாசகர் தமது உரையில் இக்கட்டான காலகட்டங்களில் மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்கள் மக்களுக்கு சிறந்த சேவைகளை ஆற்றி வந்தன.

எதிர்காலத்தில் வறிய மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அவை முன்னின்று உழைத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (க- 167)

## அரச ஊழியர் சம்பளம் வரி விதிப்பு இல்லை

கொழும்பு. பெப். 3

அரச ஊழியரின் சம்பளத்துக்கு வரி விதிக்கப்படமாட்டாது.

அரசு அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டது.

வருகிற மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியரின் சம்பளத்தில் வரி விதிப்பது சேர்க்கப்படவுள்ளது என்று சிங்களத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. அது தவறு என்று நிதி அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## இவர்களில் ஐவர் பிச்சைக்காரர்கள்

கொழும்பு, பெப்ரவரி 3

பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்ட ஐந்து பேர் தொழிலாளர் தர்ம நிதியத்தில் சேர விண்ணப்பித்துள்ளனர்.

சுயதொழில் செய்யும் எவரும் மாதா மாதம் 25 ரூபா செலுத்துவதன் மூலம் இந்த நிதியத்தில் சேரலாம் என அரசு அறிவித்தது,

இது பிச்சைக்காரர்களுக்கும் பொருந்தும் என்று அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவித்திருந்தது தெரிந்ததே

(இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உழுந்து மா**

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய முறையில் சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது. தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக்கடை,**

யாழ்ப்பாணம்.



# உதயன்

03 02 1989 வெள்ளிக்கிழமை



**மிளகாய்த் தூள்**

யாழ்ப்பாண முறைப்படியும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு
100 gr பக்கட்
1 kg பக்கட்
2 kg பக்கட் நிறைகளில்
விற்பனையாகின்றது தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.
பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக் கடை,**

யாழ்ப்பாணம்.


## வாழ்க்கைச் செலவு புள்ளி-786.5

கொழும்பு, பெப் 3

முடிந்த ஜனவரி மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 786·5 என்று புள்ளி விபரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-எ)

## இலங்கை உதவித் தூதருக்கு அழைப்பு இல்லை!

சென்னை, பெப் 3

தமிழ்நாடு முதலமைச்சராக கலைஞர் கருணாநிதி பதவி ஏற்றவைபவத்திற்கு, சென்னையில் உள்ள இலங்கை, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் உதவித் தூதர்கள் அழைக்கப்படவில்லை.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் மாநில ஆளுநரின் அலுவலகத்திற்கு இது பற்றி தெரிவித்தும் அழைப்புக்கள் அனுப்பப்படவில்லை என்று 'தஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

## போத்தா இராஜினமா

கேப்டவுன், பெப் 3

சுகயீனமடைந்துள்ள தென் ஆபிரிக்க ஜனாதிபதி திரு. போத்தா ஆளும் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து நேற்று இராஜினாமாச் செய்தார்.

ஆனால் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவது பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. [ஓ-எ]

## இந்திய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்துள்ளது என்றார்.

### தமிழீழம்

தமிழீழம் கோரிக்கையை இன்னும் ஆதரிக்கிறீர்களா? என்று கேட்டதற்கு திரு. கருணாநிதி சொன்னதாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்ஈழம் கொள்கையையே இன்னும் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது

''தமிழ் ஈழம்'' மூலம் கிடைக்கும் நன்மைகள் கொண்டதான ஒழுங்கு ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயமும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஷயத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தும் முன்னர் எதையும் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

நிரந்தரமான தீர்வு ஒன்று காண இரு தரப்பினரும் மனதுக்குள் எதையும் வைத்திருக்காமல் வெளிப்படையாகப் பேசவேண்டும் என்றார். [அ-எ]

## ஆடகு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திகதி வரை பணம் செலுத்தியவர்களின் நகைகளே நேற்று வந்து சேர்ந்தன.

இதே வேளையில் இன்னும் பத்து நாட்களில் சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளில் மூவாயிரம் தொகுதி நகைகள் யாழ்ப்பாணம் வந்து சேர இருக்கின்றன.

அடுத்த ஒரு சில வாரங்களுக்குள் வட மாகாணத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளில் எஞ்சியவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-ஐ)

## கனடா விசா மோசடி!

# தமிழ்ப் பெண் கைதாகி

## பிணையில் விடுதலை

கொழும்பு பெப் 3

புறக்கோட்டையில் செய்லர் வீதியில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட புலனாய்வுப் பொலீஸார் மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் கனடாவுக்கான விசா மற்றும் தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றினர்.

தமிழ்ப் பெண்மணி ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் தஸ்தாவேஜுகளில் மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட கிராமசேவை அதிகாரிகளின் அத்தாட்சிப் பத்திரங்கள், கையெழுத்திடப்படாத 39 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், 16 கடவுச்சீட்டுகள் 7 திருமண பதிவுப் பத்திரங்கள் பொய்க் கையொப்பமிடப்பட்ட கடவுச்சீட்டு [பாஸ்போர்ட்] விண்ணப்பப்பத்திரங்கள், 9 தேசிய அடையாளக்கார்ட்டுக்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள விண்ணப்பப்பத்திரங்கள் அடங்கியிருந்தன.

இது சம்பந்தமான விசாரணைகளுக்குத் தலைமை வகிக்கும் பொலீஸ் அதிபர் கோட்பிரே குணசேகரா, ''மோசடி செய்யப்பட்ட விஸா தொடர்பாக ஒருவரைக் கைது செய்துள்ளோம். இன்னொருவரைத் தேடுகிறோம்''- என்று சொன்னார்.

சம்பந்தப்பட்ட தமிழ்ப் பெண்மணியை பொலிஸார் கொழும்பு பிரதம நீதிவான் திரு. கே. ரி. சித்ரசிறி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிவான் சந்தேக நபரை 2 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 50 ஆயிரம் ரூபாவுக்கு இரண்டு பேர் உறுதிப்படுத்தும் பிணையிலும் விடுத்தார்.

இம்மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி சந்தேக நபருக்கு உத்தரவிடப்பட்டது. (ஒ-எ)

## நகரில் கூட்டணிப் பிரமுகர்கள்

யாழ்ப்பாணம் பெப் 3

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் குழுஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

இவர்கள் திருகோணமலை கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து ஹெலிகொப்டர்களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

திரு. அ. அமிர்தலிங்கம், திரு எம். சிவசிதம்பரம் திரு வெ. யோகேஸ்வரன், மாவைசேனாதிராசா உட்பட வேறு பலரும் இங்கு வந்துள்ள குழுவில் உள்ளனர்.

இவர்கள் சில தினங்கள் இங்கு தங்கி இருப்பார்கள் எனவும் தெரிய வருகிறது (ஒ-10)

## 20 பேர் பலி!

பங்களாதேஷ் டாக்கா அருகில் நேற்று பிற்பகல் நடந்த ரயில் விபத்தில் 20 பேர் இறந்தனர் 100 பேர் வரையில் காயமடைந்தனர்.

மூன்று வாரங்களில் நடைபெற்ற இரண்டாவது பெரிய ரயில்விபத்து இதுவாகும். (உ-எ)

## 2 ஆயிரத்து 259 குடும்பங்களுக்கு

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் ஞாயிறன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப்3

யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கைவங்கி பிரதான கிளையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரண்டாயிரத்து 259 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

★ கொழும்புத்துறை —687

★ ஈச்சமோட்டை — 1,090

★ பெரியகடை—482

(ஓ-ஐ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் யாழ். அரசடி வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சத்தியேந்திரன் (வயது 23 - மருத்துவபீடம்), முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சதாசிவம் ஜெகநாதன் (வயது 24 - விஞ்ஞானபீடம்) ஆகிய இரண்டு மாணவர்களும் மரணமானார்கள்.

உயிரிழந்த இருவரினதும் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று வைக்கப்பட்டிருந்தன. அங்கு பிரேத பரிசோதனை நடைபெற்றது. (உ-10-5)

## புதிய அரசியல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லலிதாவின் நோக்கம் சுயலாபம் பெறும் நோக்கம் கொண்டது என்று ஜானகி அணி எம், பிக்கள் மூவர் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளனர்.

ஜானகி அணியுடன் சேர்வதற்கு மூன்று கோடி ரூபா பேரம் பேசுவதாக ஜெயலலிதா மீது ஆலடி அருணா, வலம்புரிஜான், ஜெகதரட்சகன் ஆகிய 3 எம்பிக்களும் அறிக்கை ஒன்றில் குற்றஞ்சாட்டி இருக்கின்றனர்.

அதேவேளை பத்தாண்டு காலம் பதவி வகித்த சிரேஷ்ட தலைவர்களினால் ஜானகி அம்மாள் தவறாக வழிநடத்திச் செல்லப்படுவதாக ஜெயலலிதா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் குற்றஞ்சாட்டியிருக்கிறார். (ஒ-எ)

## காயமடைந்தோர். .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வயது 24 – குருநாகல்.

2 சாகுல் ஹமீட் றிஸ்வி வயது 24 - விடத்தல்தீவு மன்னார்.

3 ஜமால்தீன் முபீன் வயது 23 - விடத்தல் தீவு, மன்னார்.

(ஓ- 10)

## சுட்டுக்கொலை

மாங்குளம், பெப் 3

மல்லாவி யோகபுரம் பகுதியில் ஜமுனா பாக்கியநாதன் (வயது28) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். (ஒ 94)

## புனரமைப்பு ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலைமை முற்றுமுழுதாக வழமைக்குத் திரும்பிய பின்னரே சம்பந்தப்பட்ட கடன் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இனக்கலவரம், பயங்கரவாத நடவடிக்கைகள், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், சிவில் சீர்குலைவு போன்றவற்றால் சேதமடைந்த வர்த்தக ஸ்தாபனங்களின் கட்டடங்கள், உபகரணங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றை புனரமைக்க வங்கிகள்மூலம் கடன் வழங்க முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே. (அ-ஐ)


# கண்ணீர் அஞ்சலி

மாணவர் சமுதாயத்திற்காக உயிர்த்தியாகம் செய்த

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா**

(மருத்துவபிட முதலாம் வருட மாணவன்)

**சதாசிவம் ஜெகநாதன்**

(விஞ்ஞான பீட முதலாம்வருட மாணவன்)

ஆகிய இருவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த

**கண்ணீர் அஞ்சலி!**

- முதலாம் வருட மாணவர்கள் -
மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம், (9441)



## மரண அறிவித்தல்

**திரு. தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் (கிளி) பத்தர்**

மாசியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சன்னதிட்டி வாசியுமான திரு. தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் (கிளி) பத்தர் 02-02-1989 இல் காலமானார். இவர் காலஞ் சென்ற திரு. தாமோதரம்பிள்ளை, திருமதி சனசம்மா தாமோதரம்பிள்ளையின் அன்பு மகனும், இராசரத்தினம், இராசலிங்கம், பாலகிருஷ்ணன், வீரசிங்கம், சந்திரசேகரம், நாகரத்தினம், உருக்குமணி, பவளரதம், மகாலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலாயுதம், தனபாலரத்தினம், இரத்தினசிங்கம், நாராயணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 03-02-1989 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுழிபுரத்தில் இருக்கும் அவரது தாயாரின் இல்லத்தில் இருந்து ஈமக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள்

(9435)



## OBITUARY

**Mutthucumaru Thangaratnam**
(Retired Principal. Ramanathan College Chunnakam)

Beloved wife of the late Thilliampalam Mutthucumaru (Retired Principal, Chavakacheri Hindu College), Beloved daughter of late Sangarapilai and Katpaham Chelliah, Dearly loved sister of late Mrs Rasa-ratnam Veerasingham, Mrs Alagharatnam Devathasan Mrs Ratna Navaratnam and Chelliah Thurairajasingham, Beloved aunt of Sri devi Arasaratnam Sri jayanthy Nikhilanandan, Sri bhawani Gnanakumaran Sri ram Devathasan [All of Canada]. Sridharan Devathasan, Mrs. Vimala Krishnapillai (Colombo), Veerasingham Rajanandan [Canada). Dr Karunaunadan [U K) and Dr Bhavanandan [U S A], Attained the lotus feet of Nalluran in Canada on Sunday 29th funeral wednesday 1st Feb in Toronto, Canada.

**Mr D. Sridharan,** 8/4 Vivekananda Avenue, Colombo - 6.

**'Chelliampathy'** 44, Chapel Street, Jaffna.

(9416)



## முக்கிய அறிவித்தல்

தொல்புரம் சுழிபுரம் இ துரையப்பா அன்சன்ஸ் அடைவு கடையில் பணம் வைப்புச் செய்தவர்களும் நகை அடைவு வைத்து பாதிக்கப்பட்டோரும் தவறு செய்து 4-2-1989 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வடக்கம்பரை அம்மன் கோயில் ஆலய முன்றலில் நடைபெறும் ஓர் ஆலோசனைக் கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
ச. மாணிக்கவாசகர்,
செயலாளர்

**பாதிக்கப்பட்டோர் சங்கம்**

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். (9436)



## மரண அறிவித்தல்கள்

சித்தன்கேணி

**திரு. மாரிமுத்து குமாரசாமி**

பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து குமாரசாமி 2 2 89 வியாழனன்று காலமானார். அன்னார் செல்வநாயகத்தின் அன்புக் கணவரும் கோபாலசிங்கம் பங்கஜவல்லி (டென்மார்க்), க.சிவகணேசன் (உதவி உத்தியோகத்தர் பனம்பொருள் அபிவிருத்திச்சபை) சிறீகரன், கோகுலராணி (ஆசிரியை மகளிர் கல்லூரி - பண்டத்தரிப்பு) சுருந்தவச்செல்வி (இறுதியாண்டு மருத்துவபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் கந்தையா கோபாலசிங்கம் (டென்மார்க்) சிவகணேசன் கமலா (ஆசிரியை - முஸ்லிம் மகா வித்தியாலயம், புத்தளம்) கதிரவேலு சிறீகரன் (கிராம சேவை அலுவலர் - வட்டுமேற்கு) ஆகியோரின் மாமனாருமாவார். ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
க. சிறிகரன்

(9440)

### கௌசல்யா நடராஜக் குருக்கள்

திருமதி கௌசல்யா நடராஜக் குருக்கள் காலமாகிவிட்டார்

இவர் சுன்னாகம் காலம்சென்ற சுந்தரக் குருக்களின் சுவீகார புத்திரியும், நடராஜக் குருக்களின் அருமை மனைவியும், காஞ்சனா, சாந்தினி, வாசுகி, ராசமனோகரி, வளர்மதி, சிவஸ்ரீ, நந்தஸ்ரீ, சுபஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணபவானந்தக் குருக்கள், உருத்திரராஜசர்மா ஆகியோரின் மாமியாரும், சண்முகநாதக் குருக்கள், தியாகராஜ சர்மா, சோமசுந்தர சர்மா, காலம் சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் 02 02 89 வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ. நடராஜக் குருக்கள்.
கறுப்பிட்டி விநாயகர் ஆலயம்,
அராலி.

(8938)

### செல்வன் தனபாலசிங்கம் சத்தியேந்திரா

(1 ஆம் வருட மருத்துவபீட மாணவன் யாழ். பல்கலைக்கழகம்)

செல்வன் தனபாலசிங்கம் சத்தியேந்திரா 02-02-89 இல் அகாலமரணமானார். இவர் புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. கா. தனபாலசிங்கம் [ஆசிரியர், யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலயம்], திருமதி தனலட்சுமி தனபாலசிங்கம் (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், பாலேந்திரா (சுவிற்சலாந்து), தவஜா [யாழ் ஆங்கில திருக்குடும்ப கன்னியாமடம்), தவேந்திரா (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு திருமதி கார்த்திகேசு. திரு திருமதி இலகுப்பிள்ளை ஆகியோரின் பேரனும், திரு. கா. கனகசபை (அதிபர் இறுப்பிட்டி, அ.மெ.த.க.பா), திரு. கா. குகபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக புவியியற்பீடம்), திரு கா. லோகநாதன் (ஜேர்மனி), திரு. கா திருநாவுக்கரசு (ஆசிரியர் புங்குடுதீவு, ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாசாலை) ஆகியோரின் பெறுமகனும், திருமதி கனகசுந்தரம் கமலாம்பிகை, திருமதி சண்முகநாதன் இந்திராணி [ஆசிரியை காசிப்பிள்ளை வித்தியாலயம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் மருமகனும், திருமதிகள் சமலா பாலசிங்கம், யோகேஸ்வரி ரங்கநாதன், செல்வி யோகலட்சுமி செல்வி திலகவதி, திருமதி சுலோசனா குணரத்தினம், காலம் சென்ற திருமதி சண்முகபூபதி சற்குணம் ஆகியோரின் பெறுமகனும், திரு லோகநாதன் (லண்டன்) செல்வநாதன் (வட்டக்கச்சி), ஜெகநாதன் (டிக்கோயா) ஆகியோரின் மருமகனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 64, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் 04 - 02 - 89 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: பெற்றோர்.

[9442]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03 - 02 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [pvt.] Ltd. 292/2 Navalar Road, Jaffna. Friday 03rd February 1989.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org